**செய்தி வெளியீடு** **நாள் : 12.02.2025**

**சென்னை, காசிமேடு, புதுமனைகுப்பம், சிங்காரவேலன் நகரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் புதிய குடியிருப்புகள் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், திரு.ஜே.ஜே. எபினேசர் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் கள ஆய்வு.**

**தென்சென்னை, மத்திய சென்னைக்கு இணையாக வடசென்னையும் வளம்பெற வைப்பார் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம்** ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதி, காசிமேடு, புதுமனைகுப்பம், சிங்காரவேலன் நகரில் வசிக்கும் பொதுமக்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று இன்று (12.2.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** அப்பகுதி மக்களுக்கு நிரந்தர வாழ்வாதாரம் ஏற்படுத்தி தருவதற்காக வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் புதிய குடியிருப்புகள் அமைப்பது தொடர்பாக நேரில் சென்று கள ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 குடியிருப்புகள், புதிய சமூகநலக்கூடம் மற்றும் விளையாட்டு திடல் பணிகளின் முன்னேற்றம் குறித்து **மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் நடைபெற்று வருகின்ற பணிகள் குறித்த ஆய்வு புதிதாக தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் குறித்து **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவருடைய கவனத்திற்கு **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள்** கவனத்திற்கும் தேவைகளை கொண்டு வந்ததற்கு இணங்க அவருடைய ஆலோசனை பெயரில் இன்றைக்கு எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி காகர்லா உஷா அவர்களும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் பிரபாகர் அவர்களும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.பிரவீன் குமார்அவர்களும் ஒருங்கிணைந்து இன்றைக்கு ஆய்வினை மேற்கொண்டோம்.

அந்த வகையில் காசிமேடு புதுமனைகுப்பம், சிங்காரவேலன் நகரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறைந்த அளவு மழை பொழிதாலும், தொடர்ந்து அங்கே தண்ணீர் தேங்கி நிற்பதாகவும் அவர்களுக்கு நிரந்தர வாழ்விடத்திற்குண்டான தேவைகளை நிறைவேற்றி தர வேண்டும் என்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்** வைத்த கோரிக்கை ஏற்று, இன்றைக்கு இப்பகுதிக்கு களஆய்விற்கு இந்தப் பகுதியினுடைய மாவட்டத்தினுடைய செயலாளர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர் அவர்களும், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே. எபினேசர் அவர்களும் கள ஆய்விலே பங்கேற்றார்கள். அது குறித்து முழு விவரங்களை சேகரித்து அங்கே வாய்ப்புகள் இருக்குமாயின் கூடுதலாக புதிய குடியிருப்புகளை கட்டுவதற்கு **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** கவனத்திற்கு கொண்டு சென்று அந்த பணிகளை நிறைவேற்றுவோம்.

அதேபோல் நவம்பர் மாதம் இதே இடத்தில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 252 பணிகளுக்கு ரூபாய் 6,039 கோடி செலவில் இந்த இடத்தில் அடிக்கல் நாட்டினார். அதில் ஒரு பகுதியாக 700 குடியிருப்புகள் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் கட்டுமான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. மொத்தமாக 1080 கட்டுமானத்திற்கு கட்டிடத்திற்கு உண்டான அஸ்திவாரங்களை போட வேண்டியது இருந்தது அதில் ஆயிரம் பில்லர்கள் நிறைவு ஏற்கனவே நிறைவுற்று காலங்கள் எழுப்புவதற்கு உண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இவையெல்லாம் சினிமா படங்களில் தான் இது போன்ற காட்சிகள் எல்லாம் காண முடியும் நிஜ வாழ்க்கையில் பணிகள் துவங்கப்பட்டு ஒரு 60 நாட்கள் குள்ளாக இவ்வளவு வேகமாக பணிகள் முன்னேற்றம் நடைபெற்று இருக்கின்றது என்றால் அது திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் தான் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்கின்றோம், இதற்கு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** எங்களை இயக்குகின்ற சக்தியாக இருந்தாலும் எங்கள் துறையினுடைய அதிகாரிகள் காலை, மதியம், மாலை மற்றும் இரவு என்று பாராமல் தொடர்ந்து கள ஆய்விகள் மேற்கொள்வதின் விளைவுகளில் இந்த பணிகளினுடைய முன்னேற்றம் அடைந்திருக்கிறது. வடசென்னை பகுதியிலே பார்த்தால் டயாலிசிஸ் சென்டர் என்பது அதிக தொகைக்கு மருத்துவ வசதியை தேடி செல்ல வேண்டி இருப்பதால் இந்த இடத்தில் இரத்தம் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு, அந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஜூன் மாதத்திற்குள் இந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதேபோல் ஏழை எளிய மக்கள் பல்வேறு வகையில் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கின்ற மக்கள் அவர்களுக்கு நல்ல விளையாட்டு மைதானம் இல்லை என்ற கோரிக்கையை ஏற்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ஒரு சிறந்த விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு உண்டான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு அதையும் துறை அதிகாரிகளோடு பார்வையிட்டு இருக்கின்றோம். வால்டாக்ஸ் சாலையில் ஒட்டுமொத்தமாக வீடு கட்டுகின்ற பணி, இரத்த சுத்திகரிப்பு நிலையம், விளையாட்டு மைதானம் போன்ற அனைத்து

பணிகளும் இந்த ஆண்டு 2025 டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர் முயற்சியாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், சென்னை பெருநகர மாநகராட்சியும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியமும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும் மற்றும் மின்சாரம் துறை போன்ற அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய** கனவான வடசென்னை வளர்ச்சி திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து வகையிலையும் இது போன்ற முன்னெடுப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வோம் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

**தென் சென்னைக்கு கிடைத்த வாய்ப்புகள் போல வடசென்னைக்கு வளர்சிகள் கிடைக்கவில்லை என்ற செய்தியாளர் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் :**

இதை மாற்றுகின்ற வகையில் திராவிட மாடல் ஆட்சி என்பது மாற்றத்திற்குண்டான ஆட்சி, **அந்த வகையில் தான் வடசென்னையை வாடா சென்னையாக ஆக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்ட பயணம் தான்** முதலில் 1000 கோடி என்று வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் அறிவித்தார். அதன் பிறகு கடந்த ஆண்டு 2024 மார்ச் மாதம் 14ஆம் தேதி ரூபாய் 2,047 கோடி என்று இரண்டாவது கட்டமாக அறிவித்தார். அதேபோல் தழைத்து அருகுபோல் பெருக்கெடுத்து இன்றைக்கு 6,039 கோடி ரூபாய் ஆக நெருங்கி இருக்கின்றது. இது மேலும் கூடுதல் தொகையோடு வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் பயணிக்கும் என்பதை ஐயம் இல்லை. **ஆகவே தென்சென்னை, மத்திய சென்னைக்கு இணையாக வடசென்னையும் வளம்பெற வைப்பார் எங்கள் முதல்வர் அவர்கள்** என்று வட சென்னை பகுதி மக்கள் மனதார உளமாற நம்புகிறார்கள்.

**இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் திரு.இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.நேதாஜி உ. கணேசன், திரு.ஸ்ரீராமுலு, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்பிரமணியம், கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர்கள் திரு.சரவணமூர்த்தி, திருமதி.பரிதா பானு, மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்..